தொகுதி-13 எண் 4
Vol. 13 No. 4

புரட்டாசி-மார்கழி 2056
October - December 2025

ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 1. | G. மங்கையர்க்கரசி & மா. சண்முகம் | சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் அறங்கள் | 1-3 |
| 2. | செ.சுகக்குமார் & சி. சுப்பிரமணியம் | நாட்டுப்புற வழிபாட்டு முறைகளில் ஆட்ட கலைகள் | 4-11 |
| 3. | R. உமா & சி. அழகர் | பரணர் பாடல்களில் வெற்றி விழுமியங்கள் | 12-18 |
| 4. | க. கார்த்திக் & ஜெ.சந்திரகலா | பட்டினப்பாலையில் தொடைகளும் தொடை விகற்பங்களும் | 19-23 |
| 5. | பி. நட்சத்திரவாணி & அ. கோபிநாத் | வைணவக் கொள்கைகளில்-திருப்பாவை | 24-28 |
| 6. | சி. பரமேஸ்வரி | பண்டைய இலக்கியத்தில் நாட்டுப்புறக் கூறுகள் | 29-34 |
| 7. | ரா. லெஷ்மி & சை. ஆசிக் ஹமீது | சங்க இலக்கியம் காட்டும் நெய்தல் நிலத்தவர் வழிபாடு | 35-40 |
| 8. | நா. வைராம்பாள் & ம. பூபதி | மருதமும் மக்கட்பேறும் | 41-45 |
| 9. | மு. இராமர் மாசானம் & க. மாரியப்பன் | மகட்பாற் காஞ்சித் துறைப் பாடல்களில் பொதுமுனைவுக் கருத்து (STEREOTYPE) | 46-53 |
| 10. | இரா. ஜெய்சங்கர் | திருக்குறளில் நட்பாளுமை | 54-58 |
| 11. | க. ஸ்டெல்லாமேரி & இரா.உத்தமி | வானவில் கே. ரவியின் கவிதைகளில் இறைநம்பிக்கை | 59-65 |
| 12. | பா. மாரி (எ) சாரதா & சே. சொர்ணலதா | ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பாடு | 66-75 |
| 13. | ப. சுபா & தே.கரோலின் | இற்செறிப்பால் தலைவிக்கு உண்டாகும் மனச்சிக்கல்கள் | 76-81 |
| 14. | தமிழ்ப்பரிதி மாரி | படைப்பாக்கப் பொதும உரிமையும் பாரதிதாசனின் படைப்புகளும் | 82-87 |
| 15. | க. வீரராகவன் & வை. இராமன் | சங்க இலக்கியத்தில் தமிழர் வாணிகம் | 88-94 |
| 16. | இரா.ரெங்கராஜ் & மு.அருணாசலம் | குறுந்தொகையில் முருகன் தொன்மம் | 95-98 |
| 17. | ப. குமார் | நாட்டுப்புற இலக்கியங்களின் வடிவமும் அமைப்பும் | 99-102 |
| 18. | தி.நெல்லையப்பன் | கபிலமும் புறந்தரும் பண்பாடும் | 103-106 |
| 19. | செ.எழில்வளவன் & சோ.கண்ணதாசன் | கலைஞர் மு.கருணாநிதியின் 'கவிதை மழை' கவிதைகளில் தமிழர் பெருமை | 107-111 |
| 20. | தி.சுமதி | பாவேந்தர் பாரதிதாசனின் ஆத்திசூடியில் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள் | 112-115 |
| 21. | வெ. ஜெயலட்சுமி & சா. பூங்கொடி | பெரியபுராணத்தின் சமுதாய நிலை | 116-122 |
| 22. | தி. ரஞ்சனி & பெ.மோகன் | சடங்கு நாவலில் வாழ்வியல் விழுமியங்கள் | 123-126 |
| 23. | ஜோ.தங்கவேணி & வே.தா.தர்மராஜா | திருக்குறள் கூறும் சமுதாய சிந்தனைகள் | 127-132 |
| 24. | அ. உஷாநந்தினி | பண்டைய தமிழகத்தின் பேய்களும் பெண்களும் | 133-137 |
| 25. | விஜயகுமார். த | ஐஞ்சிறுகாப்பியங்களில் பெண்கள் பற்றிய படிமங்கள் | 138-144 |
| 26. | ஜெ. ராஜசெல்வி | கலித்தொகையில் குறிஞ்சிக்கலி உணர்த்தும் அறவாழ்வு | 145-148 |
| 27. | இ. சுஜிதா | சங்ககாலத் தமிழரின் அசைவ உணவுகள் | 149-152 |
| 28. | மூ.பாலகிருஷ்ணன் | அகப்பொருள் இலக்கணப் பிரிவு நெறியில் ஒருவழித்தணத்தல் | 153-158 |
| 29. | இரா. நிரோசா & சி. வீரமணி | எட்டுத்தொகை அகநூல்களில் அல்குல் | 159-164 |
| 30. | கோ. வெங்கடேஷ்பாபு & ச. உமாமஹேஸ்வரி | திருப்புகழ் சந்த விளக்கமும், மிருதங்கம் வாசிக்கும் முறையும் | 165-171 |


Published by : Raja Publications, 21, Race Course Road, #104, Lily Elite Apartment, Khaja Nagar, Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India. Mobile : +91- 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Raja Publications Journal of Classical Thamizh
ISSN :2321-0737
தொகுதி-13 எண் 4
Vol. 13 No. 4
புரட்டாசி-மார்கழி 2056
October - December 2025
46

தொகுதி-13 எண் 4
Vol. 13 No. 4

புரட்டாசி-மார்கழி 2056
October - December 2025

ISSN : 2321-0737

**Chief Editor**
Dr. M. Sadik Batcha

**Advisory Editor**
Dr. Aranga. Pari

**Editorial Board**
Dr. P. Selvakumar
Dr. E.R. Ravichandran
Dr. G. Beschi
Dr. M. Arunachalam
Dr. A. Govindarajan
Dr. P. Jeyakrishnan
Dr. J. Chandrakala
Dr. J. Devi
Dr. K. Jothimurugan
Dr. S. Nagoor Gani
Dr. G.Tamilmaran
Dr. P. Ibrahim
Dr. T. Nellaiyappan
Dr. P. Rajkumar
Dr. R. Dayana Christy
Dr. J. Raja
Dr. R. Karunanithi
Dr. S. Syed Abudahir
Dr. M. Prema
Dr. J. Selvakumar
Dr. P. Murugeswari
Dr. R.Subramani

இராஜா பப்ளிகேஷன்ஸ்
ஆய்விதழ்

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு
மதிப்பாய்வு ஆய்விதழ்)

Raja Publications
Journal of

# Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh
Peer Reviewed Journal)

**Published by**
**RAJA PUBLICATIONS**
New Address: 21, Race Course Road
#104, Lily Elite Apartment, Khaja Nagar
Tiruchirappalli – 620 020, Tamil Nadu, India
Mobile : +91- 9600535241
Website : rajapublications.com

# Raja Publications Journal of Classical Thamizh

A Quarterly International Tamil Journal

*Published by*

**Raja Publications, Trichy-20.**


## INFORMATION FOR AUTHORS

Raja Publications Journal of Classical Thamizh (JCT) is published Four (Every March, June, September & December) times a year. It primarily publishes significant original papers and survey articles on important advances of classical thamizh research in any of the following major areas:

**Focus Subject :** Tamil

**Written Languages :** Tamil, English

**தொல்காப்பியம் (Tholkappiyam)**

**எட்டுத்தொகை நூல்கள் (Books of Ettuthokai)**

நற்றிணை (Narrinai), குறுந்தொகை(Kuruntokai), ஐங்குறுநூறு(Ainkurunuru), பதிற்றுப்பத்து (Patirruppattu), பரிபாடல் (Paripatal), கலித்தொகை(Kalittokai), அகநானூறு(Akananuru), புறநானூறு(Purananuru),

**பத்துப்பாட்டு நூல்கள் (Books of Paththuppattu)**

திருமுருகாற்றுப்படை (Thirumurukarruppatai), பொருநராற்றுப்படை (Porunararruppatai), சிறுபாணாற்றுப்படை (Cirupanarruppatai), பெரும்பாணாற்றுப்படை (Perumpanarruppatai), முல்லைப்பாட்டு (Mullaipattu), மதுரைக்காஞ்சி (Maturaikkanchi), நெடுநல்வாடை (Netunalvatai), குறிஞ்சிப்பாட்டு (Kurincippattu), பட்டினப்பாலை (Pattinappalai), மலைபடுகடாம் (Malaipatukatam)

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (Books of Patinenkeelkanakku)**

நாலடியார் (Nalatiyar), நான்மணிக்கடிகை (Nanmanikkatikai), இன்னா நாற்பது (Innanarpatu), இனியவை நாற்பது (Iniyavainarpatu), கார் நாற்பது (Karnarpatu), களவழி நாற்பது (Kalavalinarpatu), ஐந்திணை ஐம்பது(Aintinai Aimpatu). ஐந்திணை எழுபது (Ainthinai Elupatu), திணைமொழி ஐம்பது (Tinaimoli Aimpatu), திணைமாலை நூற்றைம்பது (Tinaimalai Nurraimpatu), திருக்குறள் (Thirukkural), திரிகடுகம் (Tirikatukam), ஆசாரக்கோவை(Acarakkovai), பழமொழி (Palamoli), சிறுபஞ்சமூலம் (Cirupanchamulam), முதுமொழிக்காஞ்சி (Mutumolikkanci), ஏலாதி (Elati), கைந்நிலை (Kainnilai),

**சிலப்பதிகாரம் (Cilappatikaram), மணிமேகலை (Manimekalai), முத்தொள்ளாயிரம்(Muttollayiram), இறையனார் களவியல் (Iraiyanar Kalaviyal), தமிழ்ப் புதினம் (Novel), சிறுகதை (Short Story), நாடகம் (Drama), கவிதை (Poert), பக்தியியல் (Spritualism), நவீனம் (Modernism), மரபியல் (Traditioanlism), தமிழ் மொழியியல் (Linguistics)**

## Submission of the Manuscript

Manuscripts written in Tamil or English may be submitted to the Chief Editor Dr. M. Sadik Batcha, Associate Professor, PG and Research Department of Tamil, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020, Mobile : +91 9443417242, Email : ms_batcha@yahoo.co.in

The editorial Policy of JCT is to give a clear reply about the acceptance of all submitted papers, within a period of one month.

## Subscription Rate of JCT

Libraries, Institutions and other establishments can subscribe for JCT through publisher : Raja Publications, 21, Race Course Road, #104, Lily Elite Apartment, Khaja Nagar, Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India. Mobile : +91- 9600535241 website : rajapublications.com and in case of any difficulty they should write to the Chief Editor at address given elsewhere.

| Subscription Rates | Years | Printed |
|---|---|---|
| (Year) India INR ₹ | 1 Years Only | 3000 |
| Other Countries INR ₹ | 1 Years Only | 8000 |


**Chief Editor**

**Dr. M. SADIK BATCHA**
Associate Professor
Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 20,Tamil Nadu, India.

**Advisory Editor**

**Dr. ARANGA. PARI**
Professor
Department of Thamizh
Annamali University, Chidambram
Tamil Nadu, India.

**Editorial Board**

**Dr. P. Selvakumar**
Associate Professor
Faculty of Linguistics
International Institute of Thamizh Studies
CIT Campus, Tharamani, Chennai -600 013.
Tamil Nadu, India.

**Dr. E.R. Ravichandran**
Principal
Associate Professor
Department of Thamizh
Urumu Dhanalaksmi College
Tiruchirappalli - 620 018,
Tamil Nadu, India.

**Dr. G. Beschi**
Associate Professor & Head
Department of Tamil
Dean, School of languages and Culture,
St.Joseph's College,
Tiruchirappalli - 620 002
Tamil Nadu, India.

**Dr. A. Govindarajan**
Associate Professor
Centre for Bharathidasan Studies
Bharathidasan University,
Tiruchirappalli - 620 024
Tamil Nadu, India

**Dr. M. Arunachalam**
Principal
Govt. Arts College
Thuraiyur - 621 010
Tamil Nadu, India.

**Dr. P. Jeyakrishnan**
Professor
Department of Tamil
University of Kerala
Karyavattom, Thiruvananthapuram,
Kerala - 695034, India

**Dr. J. Chandrakala**
Assistant Professor
Department of Thamizh
Bharathidasan University
Tiruchirappalli - 620 024
Tamil Nadu, India.

**Dr. J. Devi**
Professor
Dept. of Literature
Tamil University,
Thanjavur - 613 005,
Tamil Nadu, India.

**Dr. K. Jothimurugan**
Assistant Professor & Head
Department of Tamil Studies
Manonmaniam Sundaranar University,
Tirunelveli-12, Tamil Nadu. Inida.

**Dr. S. Nagoor Gani**
Associate Professor & Head
P.G. & Research Dept. of Tamil
Jamal Mohamed College ( Autonomous)
Trichurapalli, Tamil Nadu – 620 020.

**Dr. G. Tamilmaran**
Dean of Language,
Associate Professor
Thanthai Hans Roever College
Elambalur (P.O), Perambalur - 621 220
Tamil Nadu, Inida.

**Dr P. Ibrahim**
Assistant Professor & Head
Department of Tamil
Dr. Zakir Husain College
Ilayangudi - 630 702
Sivagangai District.
Tamil Nadu, Inida.

**Dr. T. Nellaiyappan**
Associate Professor
School of Tamil studies
Madurai kamaraj University
Madurai - 625 021

**Dr. P. Rajkumar**
Associate Professor & Head
Department Tamil Studies
Bishop Heber College (A)
Tiruchirappalli - 620 017
Tamil Nadu, Inida.

**Dr. R. Dayana Christy**
Associate Professor & Head
Department of Tamil
Fathima College,
Madurai - 625018
Tamil Nadu, India

**Dr. J. Raja**
Assistant Professor
Department of Tamil
Periyar Arts College,
Cuddalore – 607 001.
Tamil Nadu, Inida.

**Dr. R. Karunanithi**
Assistant Professor
Department of Tamil
Government Arts College for Men,
Chennai - 600 035.
Tamil Nadu, India.

**Dr. S. Syed Abudahir**
Associate Professor
Department of Tamil
The New College
Chennai - 600 014
Tamil Nadu, India

**Dr. M. Prema**
Assistant Professor
Department of Tamil
Holy Cross Women's College (A)
Tiruchirappalli – 620 002.
Tamil Nadu, Inida.

**Dr. J. Selvakumar**
Assistant Professor
Department of Tamil
Loyola College of Arts & Science,(Co-Ed)
Mettala, Namakkal District - 636 202,
Tamilnadu, India

**Dr. P. Murugeswari**
Assistant Professor
Queen Mary's College (A)
Chennai - 600 004
Tamil Nadu, Inida.

**Dr. R. Subramani**
Assistant Professor
Government Arts College (A)
Thanthonimalai, Karur - 639005
Tamil Nadu, Inida.



புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள்
வெளியிட மற்றும் புத்தகங்கள்
வாங்குவதற்கு...

www.rajapublications.com

# முகவுரை

உலகின் மூத்தமொழியும், சிறப்பு வாய்ந்த மொழிகளில் ஒன்றாகிய தமிழ்மொழியில் உருவானவற்றை ஆய்வாக உலகிற்கு எடுத்துச் சொல்லும் **'செம்மொழித் தமிழ்'** ஆய்விதழ் பணிகளில் மகிழ்வுடன் தொடர்ந்து பங்கேற்கவிருக்கும் ஆய்வாளர்களுக்கு ஆசிரியர்குழு நன்றி கூறுகிறது. தொடர்ந்து பங்கேற்கத் தங்கள் முன் வேண்டுகோள் வைக்கிறது.

நன்றியுடன்

**ஆசிரியர் குழு**

**'செம்மொழித் தமிழ்' துவக்கம் : ஜுன் 2013**

மற்றொன்று:

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ், கலை & மனிதவியல் (அனைத்தும்),
மொழி இலக்கியம் & இலக்கியக் கோட்பாடுகள் காலாண்டு மதிப்பாய்வு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்
ஏப்ரல் - ஜூன்
ஜூலை - செப்டம்பர்
அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Modern Thamizh Research

**(A Quarterly International Multilateral Thamizh, "Arts & Humanities (All), Language Literature and Literary Theory Peer Reviewed Journal)**

January - March
April - June
July - September
October - December

ISSN : 2321 - 984X

# 46 JCT


| | | | |
|---|---|---|---|
| 1. | G. மங்கையர்க்கரசி & மா. சண்முகம் | சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் அறங்கள் | 1-3 |
| 2. | செ.சுகக்குமார் & சி. சுப்பிரமணியம் | நாட்டுப்புற வழிபாட்டு முறைகளில் ஆட்டக் கலைகள் | 4-11 |
| 3. | R. உமா & சி. அழகர் | பரணர் பாடல்களில் வெற்றி விழுமியங்கள் | 12-18 |
| 4. | க. கார்த்திக் & ஜெ.சந்திரகலா | பட்டினப்பாலையில் தொடைகளும் தொடை விகற்பங்களும் | 19-23 |
| 5. | பி. நட்சத்திரவாணி & அ. கோபிநாத் | வைணவக் கொள்கைகளில்-திருப்பாவை | 24-28 |
| 6. | சி. பரமேஸ்வரி | பண்டைய இலக்கியத்தில் நாட்டுப்புறக் கூறுகள் | 29-34 |
| 7. | ரா. லெஷ்மி & சை. ஆசிக் ஹமீது | சங்க இலக்கியம் காட்டும் நெய்தல் நிலத்தவர் வழிபாடு | 35-40 |
| 8. | நா. வைராம்பாள் & ம. பூபதி | மருதமும் மக்கட்பேறும் | 41-45 |
| 9. | மு. இராமர் மாசானம் & க. மாரியப்பன் | மகட்பாற் காஞ்சித் துறைப் பாடல்களில் பொதுமுனைவுக் கருத்து (STEREOTYPE) | 46-53 |
| 10. | இரா. ஜெய்சங்கர் | திருக்குறளில் நட்பாளுமை | 54-58 |
| 11. | க. ஸ்டெல்லாமேரி & இரா.உத்தமி | வானவில் கே. ரவியின் கவிதைகளில் இறைநம்பிக்கை | 59-65 |
| 12. | பா. மாரி (எ) சாரதா & சே. சொர்ணலதா | ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பாடு | 66-75 |
| 13. | ப. சுபா & தே.கரோலின் | இற்செறிப்பால் தலைவிக்கு உண்டாகும் மனச்சிக்கல்கள் | 76-81 |
| 14. | தமிழ்ப்பரிதி மாரி | படைப்பாக்கப் பொதும உரிமையும் பாரதிதாசனின் படைப்புகளும் | 82-87 |
| 15. | க. வீரராகவன் & வை. இராமன் | சங்க இலக்கியத்தில் தமிழர் வாணிகம் | 88-94 |
| 16. | இரா.ரெங்கராஜ் & மு.அருணாசலம் | குறுந்தொகையில் முருகன் தொன்மம் ‘ | 95-98 |
| 17. | ப. குமார் | நாட்டுப்புற இலக்கியங்களின் வடிவமும் அமைப்பும் | 99-102 |
| 18. | தி.நெல்லையப்பன் | கபிலமும் புறந்தரும் பண்பாடும் | 103-106 |
| 19. | செ.எழில்வளவன் & சோ.கண்ணதாசன் | கலைஞர் மு.கருணாநிதியின் ‘கவிதை மழை’ கவிதைகளில் தமிழர் பெருமை | 107-111 |
| 20. | தி.சுமதி | பாவேந்தர் பாரதிதாசனின் ஆத்திசூடியில் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள் | 112-115 |
| 21. | வெ. ஜெயலட்சுமி & சா. பூங்கொடி | பெரியபுராணத்தின் சமுதாய நிலை | 116-122 |
| 22. | தி. ரஞ்சனி & பெ.மோகன் | சடங்கு நாவலில் வாழ்வியல் விழுமியங்கள் | 123-126 |
| 23. | ஜோ.தங்கவேணி & வே.தா.தர்மராஜா | திருக்குறள் கூறும் சமுதாயச் சிந்தனைகள் | 127-132 |
| 24. | அ. உஷாநந்தினி | பண்டையத் தமிழகத்தின் பேய்களும் பெண்களும் | 133-137 |
| 25. | விஜயகுமார். த | ஐஞ்சிறுகாப்பியங்களில் பெண்கள் பற்றிய படிமங்கள் | 138-144 |
| 26. | ஜெ. ராஜசெல்வி | கலித்தொகையில் குறிஞ்சிக்கலி உணர்த்தும் அறவாழ்வு | 145-148 |
| 27. | இ. சுஜிதா | சங்ககாலத் தமிழரின் அசைவ உணவுகள் | 149-152 |
| 28. | மூ.பாலகிருஷ்ணன் | அகப்பொருள் இலக்கணப் பிரிவு நெறியில் ஒருவழித்தணத்தல் | 153-158 |
| 29. | இரா. நிரோசா & சி. வீரமணி | எட்டுத்தொகை அகநூல்களில் அல்குல் | 159-164 |
| 30. | கோ. வெங்கடேஷ்பாபு & ச. உமாமஹேஸ்வரி | திருப்புகழ் சந்த விளக்கமும், மிருதங்கம் வாசிக்கும் முறையும் | 165-171 |

# சடங்கு நாவலில் வாழ்வியல் விழுமியங்கள்


## தி. ரஞ்சனி

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

## முனைவர் பெ. மோகன்

ஆய்வு நெறியாளர் மற்றும் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.



**ஆய்வுச் சுருக்கம்:-**

செ. கணேசலிங்கன் எழுதிய "சடங்கு" நாவல், ஈழத் தமிழ்ச் சமூகத்தில் நிலவும் சாதி, மரபு, மதம், திருமண நடைமுறைகள் மற்றும் பெண்களின் அடக்கப்பட்ட நிலை ஆகியவற்றை மையமாகக் கொண்டு உருவான சமூகநோக்கு இலக்கியமாகும். இந்நாவலில் "சடங்கு" என்பது வெறும் மதச் செயற்பாடாக நிகழாமல் மனித வாழ்வையும் உறவுகளையும் கட்டுப்படுத்தும் ஒரு சமூக அமைப்பாகவே சித்தரிக்கப்படுகிறது. நாவலில் திருமணம், மரணம், வழிபாடு போன்ற நிகழ்வுகள் மனித உணர்வுகளின் அடிப்படையில் நடைபெறாமல், சமூக மரியாதை, சாதி அடையாளம் மற்றும் பொருளாதார சமநிலையின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. சமூகம் இயங்க வேண்டியதன் அடிப்படையில் இக் கட்டுரை அமைக்கப்படுள்ளது.


### முன்னுரை

இலக்கியம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். ஒரு சமூகத்தின் வேர்களிலும், அதன் ஒடுக்குமுறையிலும், மனித ஜனவரி உறவுகளிலும் இடம் பெற்றுள்ள உண்மைகளை திறமையாக வெளிப்படுத்தும் கருவியாக இலக்கியம் செயல்படுகிறது. இந்த வகையில், ஈழத் தமிழ் எழுத்தாளர் செ. கணேசலிங்கன் அவர்கள் எழுதிய "சடங்கு" நாவல், சாதி, வர்க்கம், பாவனைக, மனித உரிமைகள், பெண்ணுரிமை ஆகியவற்றை மையமாகக் கொண்ட சமூகநோக்கு இலக்கியமாகச் சிறப்பிக்கப்படுகிறது. சமூக சடங்குகள், அதன் மூலம் கட்டுப்படுத்தப்படும் வாழ்க்கை, அறிவு மற்றும் உணர்வுகளுக்கு இடையிலான மோதல்கள் போன்றவை நாவலில் மையக்கருவாக இடம்பெறுகின்றன. இந்தக் கட்டுரையில், 'சடங்கு' நாவலின் முக்கிய கதாபாத்திரங்கள் மற்றும் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, வாழ்வியல் விழுமியங்களை ஆழமாக ஆய்வு செய்ய இருக்கின்றோம்.

### பண்பாட்டு

"இசையினும் குறிப்பினும் பண்பினும் தோற்றி" (எழுத்துகுற்றிய 77). என்னும் தொல்காப்பிய காலம் தொட்டு பண்பாடு தமிழரின் உயரிய மரபாகவே போற்றி கடைப்பிடிக்கப்படுகிறது.அந்த வகையில் செ. கணேசலிங்கனின் "சடங்கு" நாவலில் பண்பாடு என்பது வெறும் பாரம்பரிய மரபுகளாக மட்டும் இல்லாமல், சமூக கட்டமைப்புகளையும், மனித உறவுகளையும் கட்டுப்படுத்தும் ஒரு சக்தியாகவே அமைந்துள்ளது.. இந்த நாவலில் "சடங்கு" என்பது ,திருமண சடங்குகள், இறப்புச் சடங்குகள் போன்ற நிகழ்வுகளை மட்டும் இல்லாது அது சமூக ஒழுங்குக்கும் அடையாளமாக உருவாக்கப்பட்டு உள்ளது. அந்த ஒழுங்கை மீறுவோர் "பண்பில்லாதவர்கள்" என்று பொருள்படுகிறார்கள். இதுவே வாழ்க்கையின் இயல்பை மறுக்கும் ஒரு எதிர்வதமாக அமையாமல் "பண்பாடு" என்பது சமூகக் கட்டமைப்புக்கு ஏற்ப மாற வேண்டிய ஒன்றாகவும், மனித உரிமை மற்றும் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பண்பாட்டு

நோக்கமாகவும் உருவாக வேண்டும் என எழுத்தாளர் வலியுறுத்துகிறார். கதைமாந்தர் பத்மா போன்ற பெண்கள், தங்கள் வாழ்க்கை அனுபவங்களின் வழியாக இந்த பண்பாட்டு கட்டுப்பாடுகளுக்கு எதிராக சிந்திக்கத் தொடங்குகிறார்கள். பெண்களுக்கு உரிமை இல்லை, தொழிலாளர்களுக்கு மனித உரிமை இல்லை, சாதியை அடிப்படையாக வைத்து நடக்கும் அனைத்து நடத்தைகளும் "பண்பாடு" என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுகின்றன. நாவல் முழுவதும் சமூக சீர்திருத்தம் என்பது பழைய வழிகளைக் கடைப்பிடிப்பதில் இல்லை, மாற்றத்திற்குத் தயாராக இருப்பதில் இருக்கிறது என்பதை நாவல் நுட்பமாக வெளிப்படுத்துகிறது. "திருமணம் என்பது மரபு பண்பாடு ஒதியாக இல்லாமல் பண்பாட்டு ரீதியில் சமுகத்தின் ஒருமைக்கு இடம் அளிக்க வேண்டும். என்ற சிந்தனை இங்கு நுட்பமாக முன் வைக்கப்படுகிறது" (சடங்கு பக்கம் *161*). நாவலில் ஒரு மடத்துச் செயலாளர் இறக்கும் போது நடைபெறும் மரணச் சடங்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகிறது. மரணம் எத்தகையவையாக இருந்தாலும், சமூக அங்கீகாரம் பெற சடங்குகள் நடைபெற வேண்டியது கட்டாயமாக்கப்படுகிறது. இங்கு பண்பாடு என்ற பெயரில் சாதிப் பாகுபாடு ஊக்குவிக்கப்படுகிறது. பத்மா, வேறு சாதியைக் சேர்ந்த ராசரத்தினத்தை காதலிக்கிறாள். ஆனால், அவள் தந்தை பொன்னம்பலத்தார் அதனை சமூக மரியாதை மற்றும் சாதி வன்மம் காரணமாக நிராகரிக்கிறார். அவருக்கு வழிபாடு, மரபு, மதிப்பு முக்கியம். பத்மாவின் விருப்பம், வாழ்க்கைத் தீர்மானம் முக்கியமல்ல. திருமணத்தை சாதி ஏற்றுக் கொள்ளக்கூடியதாக மாற்ற, பெண் கொடுத்து பெண் பெறும் பழைய திருமண பரிவர்த்தனை மரபு ஏற்பாடு செய்யப்படுகிறது. பண்பாடு என்ற பெயரில், பத்மாவின் வாழ்க்கையே புரட்டப்படுகிறதை சங்க இலக்கிய வள்ளல்களில் ஒருவரான வேள்பாரி புதினத்தில் பெண்கள் ஆண்களுக்கு துணையாக மட்டுமின்றி வழிநடத்துபவராகவும் இருந்து இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் திருமணம் போன்ற பண்பாட்டு நிகழ்வுகள் அனைவருக்கும் சமமான சமுகமதிப்பளிப்பதாக அமைய வேண்டும் எனலாம். (தமிழ் இலக்கியங்களில் பெண்கள் - பக்கம் *154*). இது ஒரு குடும்பத்தில் மட்டுமல்ல, ஒரு சமூகத்தில் நடைபெறும் சாதி அடக்கத்தின் பிரதிபலிப்பு எனலாம்.

**பெண்கள் நிலை**

செ.கணேசலிங்கனின் சடங்கு நாவலில் பெண்களின் நிலை மிகவும் தாக்கமுள்ள, மனக்கசப்புகள் நிறைந்த நிகழ்வுகளின் வழியே வெளிக்கொணரப்படுகிறது. நாவலின் முதன்மை பெண் பாத்திரமாக பத்மா முக்கியத்துவம் பெறுகிறாள். ஒரு காதல் உறவுக்குள் நுழைந்தாலும், அவளது வாழ்க்கையின் வழிமுறைகளை அவள் தீர்மானிக்க முடியாது. ராசரத்தினம் என்ற வேறு சாதியைச் சேர்ந்த இளைஞரை காதலிக்கும் பத்மாவின் விருப்பத்தை, அவளது தந்தையான பொன்னம்பலத்தார் சாதியையும், குடும்ப மரியாதையையும் தலையிலே வைத்து முற்றாக மறுக்கிறார். சமூகத்தில் "முதிர்ந்த பெண்" என பாவனை செய்யப்பட்டு, விருப்பமில்லாத திருமணத்திற்குத் தள்ளப்படுகிறார். பத்மா எனும் பெண்ணின் வாழ்க்கைத் தேர்வுகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு, அவளது அண்ணன் பரந்தாமன் மற்றும் குடும்பத்தின் கடமை நிதியியல் சமன்பாடு ஆகியவற்றிற்காகவே அவள் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது.

அதுவும், பத்மாவைவிட வயதான, அர்ச்சனைக்காரராக உள்ள சிவஞானம் என்பவரை மணக்கவேண்டும் என்ற கட்டாயத்திற்குள் ஆளாக்கப்படுகிறாள். இந்த திருமணத்தின் பின்னணியில் பத்மாவுக்கு சந்தோஷம் கிடைப்பதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை. ஏனெனில் அவளது உணர்வுகள், ஆசைகள், எதிர்பார்ப்புகள் அனைத்தும் மரபு, சடங்கு, குடும்ப பேச்சு என்ற பெயரில் நிராகரிக்கப்படுகின்றன. கணவன் சிவஞானம் அவளைப் பற்றிய தவறான

எண்ணங்களால் அவமானப்படுத்த, பத்மா மன அழுத்தத்துடன் தற்கொலை செய்து கொள்கிறாள்.

இதே போல, ஈஸ்வரி என்ற பாத்திரமும் ஒரு பெண் என்னும் அடையாளத்திற்குள் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டவளாகவே வர்ணிக்கப்படுகிறாள். பரந்தாமன் அவளது அழகின்மையை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் ஈஸ்வரி தனது பொறுமையாலும், குடும்பத்தின் ஒழுக்கத்தையும் பின்பற்றுவதாலும் பரந்தாமனின் அன்பையும் மரியாதையையும் அடைகிறாள். அவள் தாய்மையையும், வீட்டிற்குள் காத்துக் கொள்வதையும், நம்பிக்கையுடன் வாழ்வதையும் தான் அவரது வாழ்க்கை என்று கருதுகிறாள்.

இந்த நாவலில், பெண்கள் சுய விருப்பங்களை கூறும் உரிமையற்றவர்கள். அவர்கள் வாழ்க்கை ஒருபோதும் தனிமனித சுதந்திரத்தில் கட்டமைக்கப்படுவதில்லை. குடும்பத்திற்கும், சமூக மரபுகளுக்கும் அடங்க வேண்டியவர்கள் என்ற உறுதிப்பாடே அவர்களது நிலையை வரையறுக்கிறது. சடங்கு நாவல், இந்த அடக்கப்பட்ட பெண்கள் வாழ்வை மிக உண்மையுடன் சித்தரிக்கிறது – இது பெண்கள் நிலையைப் பற்றிய ஒரு கண்ணோட்டமாக உணர்ச்சிபூர்வமான சமூக விமர்சனமாக மாறுகிறது. இவர்களின் தாயான செல்லத்தாச்சியால் கூட, பத்மாவின் விருப்பத்தை ஆதரிக்க முடியாமல் தனது கணவனின் சடங்கு கட்டுப்பாட்டுக்குள் மாட்டிக்கொள்கிறாள். இவ்வாறு, "சடங்கு" நாவலில் பெண்கள் சுயமான விருப்பத்துடன் வாழ வழியில்லாதவையாகவும், சமூக ஒழுங்குக்குள் அடைக்கப்பட்டவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள்.

## வழிபாட்டு முறை

சடங்கு நாவல் முழுவதும் வழிபாடு, மதம், ஆன்மிக மரபுகள் போன்றவை ஒருவரது உணர்வுகளை மதிக்காமல், சமூக கட்டமைப்புகளை நிலைநிறுத்தும் கருவிகளாகவே சித்தரிக்கப்படுகின்றன. இங்கே "சடங்கு" என்பது எதையும் உணர்வின் அடிப்படையில் செய்யாமல், ஒரு கட்டாய மரபாக ஏற்றுக்கொள்ளும் முறையாகவே விவரிக்கப்படுகிறது. நாவலில், திருமணம் என்பது ஒரு ஆன்மீக புனிதம் அல்ல் அது சாதி மற்றும் பொருளாதார சமநிலைக்கு ஏற்ப நடத்தப்படும் ஒரு "பரிமாற்ற சடங்காக" உருமாற்றப்படுகிறது. பத்மாவின் காதல் திருமணத்தைக் குடும்பம் ஏற்கவில்லை. அவளது காதலன் ராசரத்தினம் வேறு சாதியைச் சேர்ந்தவர் என்பதால், அந்த காதல் "மதம், மரியாதை, மரபு" ஆகியவற்றுக்குப் புறம்பானதாகக் கருதப்படுகிறது. இதனால், பத்மாவை பெண் கொடுத்து பெண் பெறும் பழைய சடங்கு முறையில் விவாகரத்து செய்ய முடிவெடுக்கப்படுகிறது. இதன் மூலம், திருமணங்கள் ஆன்மிக புனிதம் அல்ல் அது குடும்பத்திற்கு பொருளாதார மற்றும் சமுதாய முகம் காக்கும் ஒரு "சடங்கு" மாத்திரம் என்பதை நாவல் வெளிப்படுத்துகிறது.

## உறவு நிலைகள்

செ. கணேசலிங்கனின் சடங்கு நாவலில் உறவுகள், அன்பு, புரிதல், பாராட்டல் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுவதில்லை. பதிலாக, சமூக மரபுகள், சாதி கட்டுப்பாடுகள், குடும்பக் கடமைகள் போன்றவை உறவுகளை கட்டுப்படுத்தும் முக்கிய காரணிகளாக உருவாகின்றன. ஒவ்வொரு உறவும் ஒரு சடங்கை பின்பற்ற வேண்டிய பிணைப்பாகவே சித்தரிக்கப்படுகிறது. பத்மா மற்றும் ராசரத்தினத்தின் உறவு உண்மையான காதல். ஆனால், அந்த காதலுக்கு சாதி என்பது தடையாக அமைகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் உயிரையே கொடுக்கக் கூடிய உறவில் இருந்தபோதும், பொன்னம்பலத்தார் போன்று மரபு மற்றும் மத மரியாதைகளை அதிகம் மதிக்கும் ஒருவரால் அந்த உறவு நிராகரிக்கப்படுகிறது. இதனால், பத்மா வேறு ஒருவரை, அதுவும் தன் விருப்பமற்ற ஒரு திருமணமாகச் செய்ய நேர்கிறது. பின்னர், பத்மா, ராசரத்தினம் உடன் யாழ்ப்பாணம் செல்லும் தருணத்தில், கணவன் சிவஞானம் அவளின் தன்மையை சந்தேகிக்கிறான். இந்த அவமதிப்பு உறவின் உள்ளார்ந்த நம்பிக்கையை உடைக்கும். முடிவில், மன அழுத்தமும், குற்ற உணர்வும்

பத்மாவை தற்கொலைக்குத் தூண்டுகிறது. அதே நேரத்தில், பத்மா மற்றும் பரந்தாமனின் உறவு (அண்ணன் – தங்கை) முழுமையான அன்பு சார்ந்த உறவாகவே படமாக்கப்படுகிறது. பரந்தாமன், தனது தங்கை திருமணம் செய்வதற்காக, தன் விருப்பத்துக்கு மாறாக, அழகு குறைவான ஈஸ்வரியை மணக்கிறான். இச்செயல், அண்ணன் என்ற பொறுப்பின் கீழ் ஒரு தியாகத்தின் வெளிப்பாடாக அமைந்தாலும், அதிலும் ஒரு 'சடங்கு' தத்துவம் உள்ளது குடும்ப ஒழுங்கை காப்பது. பரந்தாமன் மற்றும் ஈஸ்வரியின் உறவு, நேரடியாக காதலால் அல்ல, சூழ்நிலை காரணமாக ஏற்படும். ஆனால், ஈஸ்வரி தன்னுடைய பண்பு, பொறுமை, மரியாதை, ஆதரவு ஆகியவற்றால் அந்த உறவை நிலைநிறுத்துகிறாள். இங்கே காதல் இல்லாமல் தொடங்கிய உறவிலும், நிலைத்த உறவு உருவாகலாம் என்ற உண்மை வெளிப்படுகிறது. இந்த நாவலில், உறவுகள் ஒவ்வொன்றும் பரிசோதிக்கப்படுகின்றன அதாவது உணர்வுகளின் அடிப்படையா, மரபுகளின் அடிப்படையா என்பதை. ஆனால், பெரும்பாலான உறவுகள் மரபு, மதம், சடங்கு போன்றவற்றால் கட்டுப்படுத்தப்படுவதால், அந்த உறவுகளில் மனஅழுத்தம், இயலாமை, தியாகம், ஒப்புதல் ஆகியவையே அதிகம் காணப்படுகின்றன. இது நாவலின் மையக் கருத்தான சடங்கு சமூக கட்டுப்பாடுகள் உறவுகளையும் கட்டியமைக்கின்றன என்பதை வலியுறுத்துகிறது.

### முடிவுரை

செ. கணேசலிங்கனின் "சடங்கு" நாவல், எளிமையான கதைச்சொல்லலுக்குள் பதிந்திருக்கும் ஆழமான சமூக விமர்சனத்தால் தனித்துவம் பெறுகிறது. இந்த நாவல், சாதி, மதம், மரபு, வழிபாடு, திருமண சடங்குகள் மற்றும் பெண்களின் நிலை போன்றவற்றை திறமையாக சுட்டிக்காட்டுகிறது. மனித உறவுகள் அன்பின் அடிப்படையில் அல்ல, சடங்குகள், மரபுகள், சமூக கட்டுப்பாடுகள் மற்றும் பொருளாதார சமன்பாடுகள் அடிப்படையிலேயே நகர்த்தப்படுகின்றன என்பதை நாவல் உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு, "சடங்கு" நாவல் சமூக மறுமலர்ச்சி, மனித உறவுகளில் உண்மை உணர்வுகளின் தேவை, மற்றும் மரபுகளை மீளாய்வு செய்யும் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்தும் ஒரு முக்கிய சமூக நோக்கு இலக்கியமாக அமைகிறது எனலாம்.

### துணைநூற்பட்டியல்:-


செ.கணேசலிங்கன், சடங்கு, குமரன் பதிப்பகம், சென்னை, *2001.*

பன்முக நோக்கில் தமிழ் இலக்கியங்கள் ஆய்வுக்கோவை, பாரத் பல்கலைக்கழகம், சென்னை, *2020.*

தமிழ் இலக்கியங்களில் பெண்கள் ஆய்வுக்கோவை, பாரதி புக் ஹவுஸ். வேலூர், *2023.*


௸